**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**
**O.S. 141/2003**
**நாள்.03.03.2026**

**பி.வா.சா.1- சுப்பிரமணி**
**த/பெ - ஆண்டவர்**

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

24. சடையப்பகவுண்டர் இறந்தபோது அவருடைய 2வது மனைவி திருமாயி இருந்தாரா என்றால் ஞாபகமில்லை. அப்போது முதல் மனைவி திருமாயிஅம்மாள் இருந்தாரா என்றால் சடையப்பகவுண்டருக்கு ஒரு மனைவி தான், 2 மனைவிகள் இல்லை.

25. சத்தியமூர்த்தியின் தந்தையின் பெயர் சடையப்பகவுண்டர் என்றால் சரிதான். அவருக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். சத்தியமூர்த்தியின் தந்தை சடையப்பகவுண்டர் எப்போது இறந்தார் என்றால் சரியாக தெரியாது. சத்தியமூர்த்தியின் தந்தையான சடையப்பகவுண்டரின் தந்தை யார் என்றால் தெரியாது.

26. 1989 -90 ல் இறந்த சடையப்பகவுடர் யார் என்றால் சத்தியமூர்த்தியின் தந்தை (தற்போது சாட்சி சத்தியமூர்த்தியின் அண்ணன் என்று கூறுகிறார்.)

27. சத்தியமூர்த்தியின் தந்தையான சடையப்பகவுடர் இறக்கும்போது அவருடைய மனைவிகள் உயிருடன் இருந்தார்களா என்றால் தெரியாது.

28. சடையப்பகவுடரின் வாரிசு சான்று தாக்கல் செய்ய முடியுமா என்றால் என்னிடம் இல்லை.

29. சத்தியமூர்த்தி 1981ல் இறந்துவிட்டார். அவருடைய இறப்பு சான்றும், வாரிசு சான்றும் என் கைவசம் உள்ளன. அவற்றை தாக்கல் செய்ய தயாரா என்றால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். சத்தியமூர்த்தி இறக்கும்போது அவருக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான்.

30. சத்தியமூர்த்தி இறக்கும்போது அவருடைய தாயார் திருமாயி உயிருடன் இருந்த விவரத்தை தெரிந்தும், மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

31. சடையப்பகவுண்டர் இறந்தபின்பு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவருடைய பிள்ளைகளான சவடமுத்து மற்றும் சத்தியமூர்த்தி தனித்தனியாக பாகவிஸ்தி செய்துகொள்ளாமல் கண்டேத்தமாக அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள், பாகவிஸ்தி செய்து கொண்டார்களா என்று தெரியாது.

32. தாவா சொத்தை கிரையம் வாங்கும்போது தாவா சொத்து சம்பந்தமாக பார்த்த வில்லங்க சான்றை தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தை வில்லங்கம் பார்த்து தான் கிரையம் வாங்கினேன். வில்லங்கத்தை பார்க்கும்போது தாவா சொத்து சம்பந்தமாக சத்தியமூர்த்திக்கும், சவடமுத்துவிற்கும் இடையே பாகவிஸ்தி ஏற்பட்டதாக வில்லங்கம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

33. சத்தியமூர்த்தியின் இறப்பிற்கு பின்பு அவருடைய மனைவியான 1ம் பிரதிவாதி பொன்னம்மாள் குடும்பத்தை விட்டு பிரிந்து 6ம் பிரதிவாதியான சுப்பையனை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வந்த விவரம் தெரியுமா என்றால் திருமணம் செய்யவில்லை. 1ம் வாதி சுப்பையனோடு வாழ்ந்து வந்த விவரம் பற்றி ஊரில் உள்ளவர்களை விசாரித்தால் தெரியும் என்றால் சரிதான்

34. சுப்பையனின் முதல் மனைவியின் மகளை காலணம்பட்டியில் திருமணம் செய்து கொடுத்த விவரம் தெரியுமா என்றால் சரிதான். சுப்பையனின் பேத்திக்கு காதுகுத்துவிழா நடக்கும்போது 1ம் பிரதிவாதியையும், 6ம் பிரதிவாதியையும் கணவன் மனைவியாக காட்டி பத்திரிக்கை அடிக்கப்பட்டு ஊரில் கொடுக்கப்பட்டு விழா நடந்தது என்றால் சரியல்ல. மேற்கண்ட விவரத்தை பற்றி ஊரில் உள்ளவர்களை கேட்டால் தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

35. மாண்பமை சார்பு நீதிமன்றம் வேடசந்தூரில் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.188/2018 வழக்கில் மேற்படி பத்திரிக்கையை பிரதிவாதிகள் தாக்கல் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

36. சத்தியமூர்த்தியின் இறப்பிற்கு 4 மாதங்களுக்கு பின்பு அவருடைய மனைவியான 1ம் பிரதிவாதி, 6ம் பிரதிவாதியை மறுமணம் செய்து கொண்டு குடித்தனம் நடத்தி வந்த விவரத்தை நன்கு தெரிந்தும், அதை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

37. சத்தியமூர்த்தியின் இறப்பிற்கு பின்பு அருடைய மனைவியான 1ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதியை மறுமணம் செய்துகொண்டதால் சத்தியமூர்த்தியின் மனைவி என்ற அந்தஸ்தை இழந்துவிட்டார் என்றால் சரியல்ல.

38. நான் 1966ம் ஆண்டு பிறந்தேன். 19.08.1956ம் தேதியில் சடையப்பகவுடர் சின்னம்மாள் என்பவருக்கு கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும், எதற்காக எழுதிக்கொடுத்தார் என்ற விவரம் தெரியாது என்றாலும் வழக்கு தாக்கல் செய்த பின்பு வில்லங்கம் பார்த்த போது பி.வா.சா.ஆ.9 பற்றி தெரிந்துகொண்டேன்.

39. பி.வா.சா.ஆ.1ன் படி சத்தியமூர்த்திகவுடர் என்ன காரணத்திற்காக அவர் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். சடையப்பகவுடர் பி.வா.சா.ஆ.9 மூலம் சின்னம்மாளுக்கு அடமானத்திற்காக கிரையமாக எழுதிக்கொடுத்து அதன்பின் பி.வா.சா.ஆ.1 ன் மூலம் அவரின் மகன் பெயரில் அடமானத்தை மீட்டு கிரையபத்திரம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

40. பி.வா.சா.ஆ.1 ன்படி சத்தியமூர்த்திகவுடர் பெயரில் எழுதும்போது சடையப்பகவுடர் உயிருடன் இருந்தார் என்றால் எனக்கு சரியாக தெரியாது.

41. சடையப்பகவுடர் இறந்த விவரம் பற்றியும், வருடம் பற்றியும் ஏற்கனவே கூறிவிட்டு நீதிமன்றத்தை ஏமாற்றும் பொருட்டு மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

42. பி.வா.சா.ஆ.3 ன்படி சுப்பையன் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

43. 1ம் பிரதிவாதி சத்தியமூர்த்தியின் இறப்பிற்கு பின்பு சுப்பையனை திருமணம் செய்துகொண்டு வாழ்ந்துவந்ததால் சுப்பையன் 1ம் பிரதிவாதியை ஏமாற்றி மேற்படி

பி.வா.சா.ஆ.3 கிரைய பத்திரத்தை உற்பத்தி செய்து கொண்டார் என்றால் கிரையம் வாங்கியது உண்மை, ஏமாற்றி செய்தாரா என்றால் சரியல்ல.

44. 1ம் பிரதிவாதிக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் கையெழுத்து போடுவார்.

*Take down by me in open court and Read over to the witness and interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct*

B.Peter Digitally signed by B.Peter

**Principal District Munsif**
**Vedasandur**